**மாத்தறை பிரதேச சபை**

**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஆகஸ்ட் 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூலை 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 திசெம்பர் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாத்தறை பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 08 காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியான ரூபா 9,000,000 தொகை நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 866,503 தொகையான இருப்புக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 3,986,623 ஆகக் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டில் உள்ளபடியான முத்திரைக்கட்டண பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 4,466,133 ஆக இருந்தது. இந்த முத்திரைக் கட்டணத்தின் குறைவான

ஒதுக்கீடுகளான ரூபா 479,510 தொகை கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 ஆம் ஆண்டின் மே தொடக்கம் திசெம்பர் வரை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 200,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது உள்ளபடியான பெறுவனவுகள் ரூபா 950,637 ஆகக் காணப்பட்டது. ரூபா 750,637 தொகையான இந்த குறைவான ஒதுக்கீடுகள் கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் வேலைக் கடன்பட்டோர் பட்டோலையில் உள்ளடக்கப்பட்ட டோசர் கந்த இரண்டாவது உப வீதிக்காக கிடைக்க வேண்டிய தொகை ரூபா 500,000 இனால் குறைவாகக் குறிப்பிடப்பட்டமையின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் வேலைக் கடன்பட்டோர் அந்த பெறுமானத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் சபைக்குரிய மக்கள் வங்கியின் 04 சேமிப்புக் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 441,048 தொகையான காசு மீதிகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் ரூபா 8,313,442 பெறுமதியான சொத்துக்கள் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மீள வழங்கப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றுவதற்குரிய சீராக்கங்கள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபையினால் மக்கள் வங்கியில் பேணப்படுகின்ற நடைமுறைக் கணக்கில் 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதி ரூபா 2,500,000 பெறுமதியான 3 நிலையான வைப்புக்களில் பணம் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இந்த 03 நிலையான வைப்புக்களில் ஒரு வைப்பு 2011 செப்தெம்பர் மாதத்தில் ரூபா 1,008,630 தொகையாகவும் 2012 சனவரி 01 ஆந் திகதி மற்றைய இரண்டு வைப்புக்களும் ரூபா 1,530,091 தொகையாக மீளக் காசாக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,500,000 ஆக அந்த வைப்புப் பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

08 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 47,981,064 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 51,627,936 ஆனமையால் ரூபா 3,646,872 வேறுபாடு காணப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சியிருந்த கிடைக்கவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,942,225 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சியிருந்த செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 37,701,118 ஆக இருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 113,807,776 பெறுமதியான 08 கணக்கு விடயங்களுக்கான சான்றுகள் இன்மையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,296,972 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 7,311,174 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 755 | 445 | 827 |
| (ii) | வாடகை | 3,711 | 3,371 | 526 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,449 | 811 | 21 |

### 2.2.2 ஆதனவரி

சபை அதிகாரப் பிரதேசத்தில் நாவ்மன, மாகாவிட்ட, கெகனதுர மற்றும் வெவஹமன்துவ போன்ற 03 பிரதேசங்களில் ஆதன வரி செலுத்துகின்ற ஆதனங்களின் எண்ணிக்கை 3,101 ஆக இருந்ததுடன் ஆதனவரி அறவிடல்கள் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அந்த பிரதேசங்களிலிருந்து நிலுவையாக இருந்த தொகை ரூபா 757,249 ஆக இருந்தது.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 360,000 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 900,000 |

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஏப்ரல் 22 ஆந் திகதிய 1807/2 ஆம் இலக்க இலங்கைக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொதுமக்கள் பிரதிநிதியாக கையளிக்கப்பட்ட செயற்பாடுகள்/ சபையினால் கையளிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக பிரயாணச் செலவுப்

படிகளைச் செலுத்த முடியும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு எவ்வித செயற்பாடுகளும் கையளிக்கப்படாது 18 உறுப்பினர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 603,000 தொகையான பிரயாணச் செலவுப்படி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2008 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய த.ப.பா/ஆ/05/06 ஆம் இலக்க பொதுக்கடிதத்தின் பிரகாரம் தொலைபேசிப் பட்டியல் கட்டணம் செலுத்தும் போது சிட்டைகள் தொடர்பாக தொலைபேசித் தொடர்பை உறுதிப்படுத்திக் கொண்டு மாதாந்தம் ரூபா 1,000 தொகையான சிட்டைகள் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யாமல் ஒரு கொடுப்பனவு உறுதிச்சீட்டின் மூலம் மாதத்திற்கு ரூபா 19,500 படி மீளாய்வாண்டின் போது ரூபா 234,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) தென் மாகாண பிரதம அமைச்சு மற்றும் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சரின் 2005 ஒக்தோபர் 05 ஆந் திகதிய 1413/15 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் 7.3(1)(1) விதியின் பிரகாரம் உறுப்பினர்களுக்கு படிகள் செலுத்தும் போது மாதத்தில் நடத்தப்பட்ட சபைக் கூட்டங்கள் மற்றும் செயற்குழுக் கூட்டங்களுக்குச் சமூகமளிக்காமைக்கு வைத்தியச் சான்றிதழ் சமர்ப்பிக்காத உறுப்பினர்களுக்கு படிகள் தொடர்பாக உரித்தற்றிருந்த போதிலும் அந்த விதிக்கு முரணாக மீளாய்வாண்டின் போது 10 உறுப்பினர்களுக்காக ரூபா 65,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.4.1 வீதிப்பராமரிப்புப் பிரிவில் வாகனத்தை ஈடுபடுத்துதல்

(அ) வீதி பராமரிப்புப் பிரிவில் ஜே.சீ.பீ இயந்திரம், வீதிச் செப்பனிடுகை மற்றும் டெக்ரர் என்பன பின்னர் பணம் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் நீண்ட காலத்திலிருந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் நிதியினை அறவிடுவதில் நீண்ட காலதாமதம் காணப்பட்டது.

(ஆ) இந்த வாகனம் உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் பல்வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் சபையின் மூலமும் நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2012 செப்தெம்பர் 31 ஆந் திகதி வரையில் ஜே.சீ.பீ இயந்திரத்திலிருந்து ரூபா 305,369 தொகையும், வீதிச் செப்பனிடுகையிலிருந்து ரூபா 175,000 தொகையும், டெக்ரரிலிருந்து ரூபா 13,720 தொகையுமாக ரூபா 494,089 தொகை அறவிட வேண்டியிருந்தது.

### 2.4.2 ஆதனக் கடன் வட்டி

2005 மார்ச் 31 ஆந் திகதிய 08/2005 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் 11.5 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனக் கடனுக்காக வங்கி வட்டி வீதம் மற்றும் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்ட 4 சதவீத வட்டிக்கிடையேயான வேறுபாடு அரசாங்கத்தின் மூலம் மீளளிப்புச் செய்யப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 09 உத்தியோகத்தர்கள் பெற்ற கடனுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,203,090 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்த போதும் அத்தொகை 2013 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரையிலும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 வீதி விளக்குகளைப் பராமரித்தலும் கட்டுப்பாடும்

மின்சக்தி, எரிபொருள் அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய பீஈ/01/01 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொதுச் செயற்பாடுகள் நானாவித நுகர்வோர்களின் 3 சதவீத அளவினை விஞ்ச முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபை அந்த எல்லையினை கணிப்பீடு செய்து வீதிவிளக்குளைப் பொருத்துவதற்கு இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர் /2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது எதிர்வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டவைகளை நிறைவேற்றுவதற்காக செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.5 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வெளிப்படுத்துகைகள் சமர்ப்பித்தல்

1988 இன் 74 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அந்தப் பிரதேச சபையின் உப தலைவரை உள்ளடக்கிய 06 உறுப்பினர்களினால் 2012 ஆம் ஆண்டிற்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வெளிப்படுத்துகைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 2.5 மனிதவள முகாமைத்துவம்

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான 40 ஊழியர் எண்ணிக்கைக்காக மீளாய்வாண்டில் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பதவியணியினர் சம்பளம் மற்றும் உறுப்பினர் படிகளுக்காக ரூபா 12,438,000 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் சம்பளச் செலவினம் ரூபா 24,068,021 ஆனமையால் சபை நிதியத்திற்கு ரூபா 11,630,021 தொகையான மேலதிக செலவினப் பொறுப்பாக ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2002 சனவரி 03 மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் இலக்கம் 14 மற்றும் 28 இன் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களில் அமைய, நாட்கூலி மற்றும் ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்தல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 23 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 5,491,096 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த சுற்றுநிருப ஆலோசனை மீறி ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டால் நிறுவனத் தலைவர் அதற்காக தனிப்பட்ட பொறுப்பினை ஏற்கவேண்டியிருந்தமையும் அதில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

### 2.6 உள்ளகக் கணக்காய்வு

சபையின் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகளுக்காக தனியான பிரிவைத் தோற்றுவித்தல் அல்லது தகுதியான ஒருவரை நியமித்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சுச்

செயலாளரின் 2005 நவம்பர் 08 ஆந் திகதிய உள்ளூராட்சி மீளமைத்தல் சுற்றுநிருபத்தின் இலக்கம் 03 இன் 08 ஆம் பந்தியின் பிரகாரம் சபையின் உள்ளகக் கணக்காய்வு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்